**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. இஸ்மத் யுனூான் | பி.வா.சா.1 |
| Father's Name | : | செய்யது அகமத் | |
| Village | : | மேலப்பாளையம் | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | வியாபாரம் | |
| Caste | : | .. | |
| Religion | : | .. | |
| Age | : | 50 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.12.2017

முதல் விசாரணை :

நான் இந்த வழக்கில் 28ம் பிரதிவாதி. இந்த வழக்கு விபரங்கள் எனக்கு நேரில் தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவைதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | |
|---|---|---|
| Name | : திரு. இஸ்மத் யுனூான் | பி.வா.சா.1 |
| Father's Name | : செய்யது அகமத் | |
| Village | : மேலப்பாளையம் | |
| Taluk | : பாளையங்கோட்டை | |
| Calling | : வியாபாரம் | |
| Caste | : .. | |
| Religion | : .. | |
| Age | : 50 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.01.2018

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி :</u>

நான் 22.04.1951ம் தேதிய கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1. 24.11.1961ம் தேதிய கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2. 04.08.2008ம் தேதிய பொது அதிகார ஆவணத்தின் அசல் பி.வா.சா.ஆ.3. 18.05.1949ம் தேதிய செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.4. 24.09.1960ம் தேதிய ஒத்தி ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.5. 10.06.1949ம் தேதிய கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.6. ஆகும்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | |
|---|---|---|
| Name | : திரு. இஸ்மத் யுனூான் | பி.வா.சா.1 |
| Father's Name | : செய்யது அகமத் | |
| Village | : மேலப்பாளையம் | |
| Taluk | : பாளையங்கோட்டை | |
| Calling | : வியாபாரம் | |
| Caste | : .. | |
| Religion | : .. | |
| Age | : 50 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.01.2018

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி :</u>

தாவா சொத்துக்களைக் காட்டக்கூடிய புகைப்படங்கள் பி.வா.சா.ஆ.7. (புகைப்படங்கள் தாவா சொத்துக்களை காட்டக்கூடியது அல்ல வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது).

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. இஸ்மத் யுனூஸ் | பி.வா.சா.1 |
| Father's Name | : | செய்யது அகமத் | |
| Village | : | மேலப்பாளையம் | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | வியாபாரம் | |
| Caste | : | .. | |
| Religion | : | .. | |
| Age | : | 50 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.01.2018

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

பி.வா.சா.ஆ.1, 4 முதல் 6 வரையான ஆவணங்கள் பற்றி எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் நேரில் தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் கண்ட சொத்துக்கள் 15.12.1947ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின்படி கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ன் அசல் கிரைய சமயத்தில் கிரையம் பெற்றவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அசல் ஆவணம் வாரிசு ஆன ராக்கம்மாள், சங்கரம்மாள் மற்றும் பலவேசத் தேவர் ஆகிய 25 முதல் 27 பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றால் சரிதான். வீரபுத்திர தேவரின் வாரிசுகள் ஊரில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். அதில் ஒரு மகள் இறந்து விட்டார். அவருடைய கணவர் உயிருடன் தான் ஊரில் உள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ல் பூர்வீக சொத்து என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.12.1947ம் தேதிய பாகப்பிரிவினை படி தாவா சொத்தினை பிச்சையா தேவர் மற்றும் சங்கரசுப்பு தேவர் ஆகியோர் பெற்று தனித்தனியாக பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ன் அசல் இல்லாததால் பி.வா.சா.ஆ.2ல் கிரையம் கொடுத்தவர்களின்

கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான். அதன் அசலை பார்த்தால் தான் கிரையம் கொடுத்த 3ம் வாதி கையெழுத்து செய்துள்ளாரா என்பதை அறிய முடியும் என்றால் சரிதான். எதிர் வழக்குரை மற்றும் கூடுதல் எதிர் வழக்குரையை நான் தான் எனது வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்தேன். நான் வீரபுத்திர தேவரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வீரபுத்திர தேவரை பற்றியும் அவரது குடும்ப வம்ச வழியை பற்றியும் தெரிந்தவர்கள் ஊரில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து 17.05.1898ம் தேதிய கிரைய ஆவணப்படி சண்முகத் தேவர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருடைய மகன்கள் தான் பிச்சையா மற்றும் சங்கரசுப்பு என்றால் சரிதான். பிச்சையா, சங்கரசுப்பு மற்றம் அவர்களது தகப்பனார் சண்முகத்தேவர் ஆகிய மூவரும் சேர்ந்து தான் வா.சா.ஆ.2ன் படி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2ன் படி கிடைத்த சொத்துக்களை தான் சுப்பையா மற்றும் சங்கரசுப்பு வா.சா.ஆ.3ன் மூலமாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2ன் மூலமாக தாவா சொத்து இருவருக்கும் பொதுவாக கிடைத்தது என்றால் சரிதான். அதன் பின்னர் வா.சா.ஆ.3ன் மூலமாக தாவா சொத்தை அவர்கள் இருவரும் வடபாதி, தென்பாதி என பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பிரித்துக் கொண்டவாறு அவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு அவர்களுக்குள் கூட்டு அனுபவம் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வா.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்கள் மூலமாக சங்கரசுப்பு, பிச்சையா மற்றும் அவர்களது தகப்பனார் சண்முகத்தேவருக்கு கிடைத்தது என்றால் சரிதான். தாவா சொத்து அவர்களுக்கு பூர்வீக சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ல் கண்ட சொத்து பூர்வீக சொத்து கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் பெற்ற பின்னர் வீரபுத்திர தேவருக்கோ அவருடைய வாரிசுகளுக்கோ பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வீட்டு

மனைகளாக பிரித்ததற்கு அங்கீகாரம் கிடையாது என்றால் சரிதான். அந்த நேரத்தில் அதற்கு அங்கீகாரம் தேவையில்லை. அவ்வாறு அங்கீகாரம் தேவையில்லை என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட இடத்தில் பொது உபயோகத்திற்காக மாநகராட்சிக்கு நிலம் எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து முழுவதும் காலிமனையாகத்தான் உள்ளது என்றால் ஒரு பள்ளி வாசலும் 2 வீடுகளும் உள்ளன. நான் தாவா சொத்தில் பள்ளிவாசல் மற்றும் 2வீடுகள் உள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றும் அதனால் தான் அது பற்றி என்னுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சங்கர சுப்பு தேவரின் மகன் சண்முக வேல்தேவர் இல்லை என்று வாதிகள் அனுப்பிய அறிவிப்பினை நான் எனது பதில் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பதில் அறிவிப்பில் குறிப்பிடாததற்கு எந்த காரணமும் கிடையாது. பி.வா.சா.ஆ.2ஐ 3ம் வாதி எழுதிக் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதனை 3ம் வாதி எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2ல் சங்கரசுப்பு தேவரின் மகன் சண்முகவேல்தேவர் என சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2ல் சங்கரசுப்பு தேவர் சங்கரசுப்பு தேவர் மற்றும் பிச்சையா தேவர் ஆகியோர்களின் வாரிசு என்று காட்டுவதற்கான ஆவணம் ஒப்படைத்ததாக குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 அந்த சொத்தின் உண்மையான உரிமையாளர்களால் எழுதப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் மூலமாக வீரபுத்திர தேவருக்கோ அவரது வாரிசுகளுக்கோ எந்தவிதமான உரிமையும் அனுபவமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சொத்தினை கிரையம் கொடுத்தவர்கள் யாரும் வீரபுத்திர தேவரின் வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. நான் தான் உரிமையில்லாத நபர்களிடம் ஆவணங்களை உருவாக்கி வாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்கிறேன் என்றால் சரியல்ல. 23 முதல் 29 பிரதிவாதிகளுக்கு உரிமையோ, அனுபவமோ இல்லாத சொத்துக்களை பொறுத்து நான் எழுதிக் கொடுத்ததாக

சொல்லப்படும் ஆவணங்கள் சட்டப்படி செல்லாதவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்களின் படி தாவா சொத்து 1 மற்றும் 2 வாதிகளுக்குத் தான் பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 1961ம் வருடத்திய கிரைய ஆவணத்தை ஒப்புக் கொண்டு புகாரை வாபஸ் பெற்றுக் கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அசல் ஆவணங்களை முன்னிலை படுத்தாமல் என்னுடைய கட்சி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிகள் கோரியவாறு பரிகாரம் பெற உரிமை உடையவர்கள் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. முகம்மது ஹனிபா | பி.வா.சா.2 |
| Father's Name | : | சாகுல் ஹமீது | |
| Village | : | மேலப்பாளையம் | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | வியாபாரம் | |
| Caste | : | .. | |
| Religion | : | .. | |
| Age | : | 50 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.01.2018

முதல் விசாரணை :

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி. இந்த வழக்கு விபரங்கள் எனக்கு நேரில் தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவைதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. முகம்மது ஹனிபா | பி.வா.சா.2 |
| Father's Name | : | சாகுல் ஹமீது | |
| Village | : | மேலப்பாளையம் | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | வியாபாரம் | |
| Caste | : | .. | |
| Religion | : | .. | |
| Age | : | 50 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.01.2018

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :

எனக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரில் என்னை அழைத்து விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு எதிராக எந்த புகாரும் இல்லை. என்னை காவல் நிலையத்தில் விசாரித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் தாவாவானது சொத்துரிமை சம்மந்தப்பட்டதாக இருந்ததால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள கூறி புகாரினை முடித்து வீட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த புகார் என்னவாக முடிந்து விட்டது என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியத்தில் குறிப்பிட்ட சேமாட்டி அப்துல் காதர் என்பவர் அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். சாதிக் என்பவர் பொதுபணித்துறையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். காவல் துறையில் 2ம் வாதி 28ம் பிரதிவாதி மீதும் வேல்முருகன் என்பவர் மீது மட்டுமே புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான். அந்த புகாரில் சேமாட்டி அப்துல் காதரும், சாதிக் மற்றும் மாரியப்பன் ஆகியோரும் தரப்பினர்கள் கிடையாது

என்றால் சரிதான். ஆனால் அவர்களும் விசாரணைக்கு வந்திருந்தார்கள். அவர்கள் விசாரணைக்கு வந்ததாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் எந்த தேதியில் பணம் கேட்டு மிரட்டியதாக கூறவில்லை என்றால் நினைவில்லை. அவ்வாறு மிரட்டியதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எடுக்கவில்லை ஆனால் 28ம் பிரதிவாதியிடம் கூறினேன். நான், 28ம் பிரதிவாதி மற்றும் வேல்முருகன் ஆகிய மூவரும் திருநெல்வேலி மாநகராட்சியிடமிருந்து மீன் கடை மற்றும் மேலப்பாளையம் சந்தையை ஏலம் எடுத்து நடத்தி வருகிறோம் என்றால் இல்லை. சேமாட்டி அப்துல் காதர், சாதிக் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் ரூ.10,00,000/= கேட்டு மிரட்டியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அப்போது 28ம் பிரதிவாதி, பசீர் மற்றும் முருகன் ஆகியோர்கள் உடன் இருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 28ம் பிரதிவாதி மிரட்டலுக்கு பயப்படமாட்டேன் என்றும் வழக்கை பார்த்துக் கொள்வதாக கூறிவிட்டார் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான், 28ம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து ஒரு சொத்தின் வில்லங்க சான்றிதழை எடுத்து பார்த்து அது தொடர்பாக நகல் எடுத்து பார்த்து ஆவணங்களை உருவாக்கி அந்த சொத்துக்களை மோசடியாக அபகரிக்கும் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அது போலவே இந்த வழக்கிலும் வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்து முன் பத்திர நகல்களை எடுத்து பார்த்து வழக்கிற்கு சம்மந்தமில்லாதவைகளை தொடர்பு படுத்தி ஆவணங்களை உருவாக்கி இந்த வழக்கை எதிர் வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் தான் பி.வா.சா.ஆ.1, 2, 4 மற்றும் 5 ஆவணங்களின் நகல்களை வீரபுத்திர தேவர் வாரிசுகள் யாரும் நகல்

எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய பங்குதாரர்களுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | | |
|---|---|---|---|
| Name | : | திருமதி. சங்கரம்மாள் | பி.வா.சா.3 |
| Father's Name | : | க.பெ. பலவேசம் | |
| Village | : | சென்னல்பட்டி | |
| Taluk | : | ஸ்ரீவைகுண்டம் | |
| Calling | : | கூலி | |
| Caste | : | .. | |
| Religion | : | .. | |
| Age | : | 65 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.02.2018

முதல் விசாரணை :

நான் இந்த வழக்கில் 26வது பிரதிவாதி. இந்த வழக்கு விபரங்கள் எனக்கு நேரில் தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவைதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | | |
|---|---|---|---|
| Name | : | திருமதி. சங்கரம்மாள் | பி.வா.சா.3 |
| Father's Name | : | க.பெ. பலவேசம் | |
| Village | : | சென்னல்பட்டி | |
| Taluk | : | ஸ்ரீவைகுண்டம் | |
| Calling | : | கூலி | |
| Caste | : | .. | |
| Religion | : | .. | |
| Age | : | 65 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.04.2018

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :

28ஆம் பிரதிவாதி மட்டுமே வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானோ என்னுடையோ குடும்பத்தினரோ வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 28ஆம் பிரதிவாதிக்கு எங்கள் குடும்பத்தை பற்றியோ வீரபுத்திர தேவர் வாங்கி அனுபவித்தாக கூறுவதைப் பற்றியும் தெரியாது என்றால் எனக்கு நினைவில்லை மற்றும் தெரியாது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய குடியிருப்பு வீட்டில் தீவிபத்து ஏற்பட்டதாக கூறுவது எந்த வருடம் எந்த மாதம் என்றால் தெரியாது. 28ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ராக்கம்மாள் தான் எனது குடும்பத்தில் மூத்தவர் என்றால் சரிதான். எனது தகப்பனார் என்று சொல்லக்கூடிய வீரபுத்திரதேவர் 1961ல் கிரையம் பெற்றது எனக்கு நேரில் தெரியாது என்றால் எனது அப்பா எனக்கு சொன்னார். எனது சகோதரி என்று சொல்லக்கூடிய ராக்கம்மாள் தான் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் அவருக்கு கிரையம் பற்றி தெரியும் என்றால்

தெரிந்திருக்குமோ என்று எனக்கு தெரியாது. அவர் உடல் நிலை சரியில்லாமல் இருக்கிறார். ராக்கம்மாளுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார் என்று என்னுடைய முதல் விசாரணையில் கூறவில்லை என்றும் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு எனது தந்தை என்று சொல்லக்கூடிய வீரபுத்திரதேவருக்கோ அவருக்கு பின்னர் அவருடைய வாரிசுகளுக்கோ பட்டா எதுவும் கிடையாது என்றால் பட்டா தீப்பிடித்து எரிந்துவிட்டது. தீப்படித்து எரிந்த பட்டாவிற்கு நகல் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வீரபுத்திரதேவனின் வாரிசு என்று காட்டக்கூடிய ஆவணம் என்வசம் இல்லை. தாவா சொத்தை நானோ எனது சகோதரிகளோ அனுபவித்து வருவதை காட்ட ஆவணங்கள் இல்லை என்றால் அனைத்தும் தீப்பிடித்து எரிந்து விட்டது. நானும் எனது சகோதரிகளும் இறந்துபோன எனது மற்றொரு சகோதரி உச்சிமாகாளிக்கும் எனது தாயாருக்கும் வாரிசுகள் என்று காட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் வீட்டிலிருக்கும். அதை தாக்கல் செய்வதற்கு எந்த காரணமும் இல்லை என்றால் அது உள்ளதா இல்லையா என்று தெரியவில்லை.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI</u>**

O.S. No. 227 of 2010

| | | | |
|---|---|---|---|
| Name | : | திருமதி. சங்கரம்மாள் | பி.வா.சா.3 |
| Father's Name | : | க.பெ. பலவேசம் | |
| Village | : | சென்னல்பட்டி | |
| Taluk | : | ஸ்ரீவைகுண்டம் | |
| Calling | : | கூலி | |
| Caste | : | .. | |
| Religion | : | .. | |
| Age | : | 65 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.06.2018

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

பி.வா.சா.ஆ.2ன் அசலை பார்த்தால் தான் 3வது வாதியும் நான் கூறும் சண்முகவேல் தேவரும் வீரபுத்திர தேவருக்கு கையொப்பம் செய்து விற்பனை செய்துள்ளாரா என்பது தெரியவரும் என்றால் அது தீ பிடித்து எரிந்து விட்டது. வீடு தீ பிடித்த விட்ட விபரத்தை காவல் துறையில் புகாரோ அல்லது வேறு ஆவணங்களோ கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தீயணைப்பு துறை வந்து தான் தீயை அணைத்தது என்றால் சரிதான். வீடு தீ பிடித்து அசல் ஆவணம் எரிந்து விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சங்கரசுப்பு தேவரின் மகன் தான் சண்முகவேல் தேவர் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சங்கர சுப்பு தேவரின் மகன் பெயர் தங்கவேல் தேவர் என்றால் அது அவருடைய பட்ட பெயராக இருக்கலாம் அவருடைய உண்மையான பெயர் சண்முகவேல் தேவராகும். நான் கூறுவது போல 3ம் வாதியேனா சங்கர சுப்பு தேவரின் மகன் தங்கவேல் தேவரோ வீரபுத்திர தேவருக்கு 1961 அன்று கிரையம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதன்படி தாவா சொத்தின் அனுபவத்தையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2ல் கண்ட வீரபுத்திர தேவரின் வாரிசுகள் தான் நாங்கள் என்று

பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எங்களிடமிருந்து இஸ்மத்யூனூான் என்பவா் பொது அதிகார ஆவணம் வாங்கும் போது தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான நகல்களை எடுத்து வந்து எங்களிடம் காண்பித்து அதிகாரம் பெற்றாா்கள் என்றால் நாங்கள் தான் நகல் எடுத்து கொடுத்தோம். அவா் நகல் எடுத்து கொண்டு வந்து அதனை விற்று தருவதாக சொன்னதால் தான் நாங்கள் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் வீரபுத்திர தேவரை நன்கு தெரிந்தவா்கள் இருக்கிறாா்கள் என்றால் இருந்தாா்கள் தற்போது இறந்து விட்டாா்கள். எங்களது வழக்கறிஞருக்கு எதிா் வழக்குரை தாக்கல் செய்வதற்கு விவரம் சொன்னதும் வாரிசு விவரம் சொன்னதும் இஸ்மத்யூனூான் தான் என்றால் இல்லை. அந்த விவரங்களை வழக்கறிஞாிடம் யாா் சொன்னாா் என்றால் எனது கணவா் தான் சொன்னாா். அந்த விவரங்களை எனக்கு நேரடியாக தெரியாது. எனது கணவா் சொல்லித் தான் தெரியும். அந்த விவரங்களை வழக்கறிஞரை சந்தித்து எனது கணவா் சொன்னாரா இஸ்மத்யூனூான் சொன்னாரா என்று எனக்கு தெரியாது என்றால் எனது கணவா் தான் சொன்னாா். என்னுடைய நிருபண வாக்குமூலத்திற்கு இஸ்மத்யூனூான் தான் விவரம் சொன்னாரா என்றால் தெரியவில்லை. நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் இஸ்மத்யூனூான் சொன்னதால் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பிச்சையா தேவா் மற்றும் சங்கரசப்பு தேவருக்கு இடையில் 15.12.1947 அன்று நடந்த பாகப்பிரிவினை விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த பாக ஆவணம் பற்றிய விவரங்கள் பி.வா.சா.ஆ.2ல் துலங்காது என்றால் சரியல்ல. தீ விபத்தில் என்னென்ன அசல் ஆவணங்கள் எரிந்தது என என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் என்னென்ன ஆவணங்கள் எரிந்து விட்டன என்று எனக்கு தெரியாது. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் நினைவில்லை. நான் திருமணம் ஆனதில் இருந்து எனது கணவருடன் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 30, 40 ஆண்டுகள் இருக்கும் என்றால் 45

ஆண்டுகள் இருக்கும். இஸ்மத்யூனூனுக்கு பவர் கொடுப்பதற்கு முன்னர் சொத்து சம்மந்தப்பட்ட ஆவண விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆனால் சொத்து விவரம் தெரியும். தாவா சொத்தை நாங்கள் மனை பிரிவாக அங்கீகாகரம் பெறவில்லை என்றால் தெரியவில்லை. தற்போது வரை தாவா சொத்து காலிமனையாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல. வீடு மற்றும் பள்ளிவாசல் உள்ளன. தாவா சொத்தில் பிளாட்டுகள் தனிதனியாக பிரிக்கப்பட்டு சர்வே கற்கள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வீடு மற்றும் பள்ளி வாசல் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இஸ்மத்யூனூன் எங்களது பொது அதிகார முகவராக வந்த பின்னர் தாவா சொத்துக்களை பார்த்துள்ளேனா என்றால் சிறு வயதில் பார்த்துள்ளேன். அதன் பின்னர் பார்க்கவில்லை. எங்கள் குடும்பத்தில் தாவா சொத்தை மேற்பார்வை பார்த்து நிர்வாகம் செய்து விற்பனை செய்வதற்கு ஆண்கள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. பெண்களாகத் தான் உள்ளோம். எனது கணவர் மட்டும் இருக்கிறார். சொத்துக்களை கண்டு பிடித்து விற்று தருவதாக இஸ்மத்யூனூன் சொன்னதால் அவருக்கு பவர் கொடுத்தோம் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமான வீரபுத்திர தேவரின் அசல் கிரைய ஆவணம் மற்றும் முன்னுரிமை அசல் ஆவணத்தையும் இஸ்மத்யூனூனுடம் ஒப்படைத்து விட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவம் வாதி வசம் தான் இருந்து வருகிறது என்றும் எப்போதும் எங்கள் வசம் இருந்ததில்லை என்றால் சரியல்ல. வீரபுத்திர தேவர் உயிருடன் இருந்த போது செலுத்திய அசல் தீர்வை ரசீதுகள் அவருடைய வாரிசுகள் செலுத்திய அசல் தீர்வை ரசீதுகள் ஆகியவற்றை இஸ்மத்யூனூனுடம் ஒப்படைத்து வீட்டோம் என்றால் சரிதான். வீட்டில் தீ பிடித்து விட்டதால் ஆவணங்கள் எரிந்து விட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1961ல் கணபதி தேவர் வகையறா வீரபுத்திர தேவருக்கு கிரையம் கொடுத்து விட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் வீரபுத்திர தேவரின் வாரிசுகள் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள்

அனைவரும் சொத்தை அடைந்து வீட்டு மனைகளாக பிரித்து இஸ்மத்யூனூான் மூலமாக விற்று விட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு விற்பனை செய்வதற்கு உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. வாதிகளின் சொத்தை அபகரிப்பதற்காக இஸ்மத்யூனூானுடம் சேர்ந்து போலி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இஸ்மத்யூனூானுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் வாதி கோரியவாறு பரிகாரம் பெற உரிமை உடையவர் என்றால் சரியல்ல.

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.சித்ரா | பி.வா.சா.4 |
| Husband's Name | : இசக்கி முத்து | |
| Village | : கீழநத்தம் | |
| Taluk | : பாளையங்கோட்டை | |
| Calling | : சார் பதிவாளர் அலுவலக உதவியாளர் | |
| Caste | : .. | |
| Religion | : .. | |
| Age | : **39** | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2018

முதல் விசாரணை :

நான் தற்போது பாளையங்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்துள்ளது. அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். கணபதி தேவர் மற்றும் சண்முக வேலு தேவர் ஆகியோர் 24.11.1961 அன்று வீரபுத்திர தேவர் என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் உண்மை நகல் சா.சா.ஆ.1. அவர்களுடைய கைரேகை அடங்கிய பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.2.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

சா.சா.ஆ.1 மற்றும் 2ல் கண்ட ஆவணம் பதிவு செய்யப்பட்ட போது நான் பணியில் இல்லை. அதனால் அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால்

சரிதான். அப்போது பணியிலிருந்த சார் பதிவாளர் யார் என்றால் தற்போது ஓய்வு பெற்றிருப்பார். அவர் ஓய்வு பெற்றிருந்தாலும் அவரை விசாரித்தால் அந்த ஆவணம் யாரால் எப்போது எழுதிக் கொடுக்கப்பட்டது உள்ளிட்ட விபரம் தெரியவரும் என்றால் தெரிந்திருக்கலாம். சா.சா.ஆ.1ல் கண்ட கணபதி தேவர் தான் இந்த வழக்கின் 3வது வாதியா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு வந்த அழைப்பாணையில் கையெழுத்து மற்றும் கைரேகை பதிவேடு கொண்டு வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கையெழுத்துக்கு என்று தனியாக பதிவேடு இல்லை. சா.சா.ஆ.2ல் அவர்களுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். கையெழுத்துக்கள் அசல் ஆவணத்தில் தான் இருக்கும் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் மூலமாக யார் கிரையம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் யார் கிரையம் பெற்றார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சா.சா.ஆ.2ல் உள்ள கைரேகை யாருடையது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. பிரேமா | பி.வா.சா.5 |
| Husband's Name | : சுருளி | |
| Village | : குருவிகுளம் | |
| Taluk | : திருவேங்கடம் | |
| Calling | : சார் பதிவாளர், பாளையங்கோட்டை | |
| Caste | : .. | |
| Religion | : .. | |
| Age | : 36 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.08.2018

முதல் விசாரணை :

நான் தற்போது பாளையங்கோட்டை சார் பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்துள்ளது. அழைப்பாணையில் குறிப்பிட்டள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். 17.02.1966 அன்று எழுதப்பட்டு 19.02.1966 அன்று ஆவண எண்.834/ 1966 ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணம் யாரால் யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் திருநெல்வேலி தாலுகா, மேலப்பாளையம், கருங்குளம் தெற்கு மறக்குடி தெருவில் இருக்கும் சண்முக தேவர் அவர்கள் குமாரர் விவசாயம் சப்பாணி தேவர் அவர்களுக்கு மேற்படி தாலுகா கீழவீரராகவபுரம், செல்வ விநாயகர் தெருவில் இருக்கும் பிச்சையா தேவர் அவர்கள் குமாரர் விவசாயம் கணபதி தேவர் 1, மேற்படியாரின் தாயார் சொர்ணம்மாள் 2 ஆகியோர்கள் எழுதி கொடுத்துள்ளார்கள். அது கிரைய ஆவணமாகும். அந்த ஆவணத்தில் என்ன சொத்தை எழுதி கொடுத்துள்ளார்கள்

என்றால் மேலப்பாளையம் கிராமம், கன்னிமார்குளம் புறவில், சர்வே எண்.116/4க்கு டவுண் சர்வே 5, வார்டு 20, பிளாக் 23, டி.எஸ்.எண்.2328/4 செண்டு 37 என்ற சொத்து முதலாவது இலக்கமாகவும் சர்வே எண்.115/3க்கு ஷை டவுண் சர்வே ஷை வார்டு, ஷை பிளாக், டி.எஸ்.நம்பர் 2327/3ல் செண்டு 12ம் என்ற சொத்து 2வது இலக்கமாகவும் சர்வே எண்.116/1 ஷை டி.ஸ்.வார்டு, ஷை பிளாக், டி.எஸ்.நம்வர் 2328/1 செண்டு 23 என்ற சொத்து 3வது இலக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை எழுதி கொடுத்த நபர்களின் கைரேகை பதிவேட்டில் உள்ள கைரேகை மற்றும் கையெழுத்துக்களை கொண்டு வந்துள்ளேன். அந்த பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.3. 24.09.1960ம் தேதிய ஆவணம் யார் யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் 24.09.1960 அன்று திருநெல்வேலி தாலுகா, மேலப்பாளையம், கருங்குளம் தெற்கு, மறக்குடி தெருவில் இருக்கும் சண்முக தேவர் அவர்கள் குமாரர் விவசாயம் சப்பாணி தேவர் அவர்களுக்கு ஷை தாலுகா, கீழ வீரராகவபுரம், செல்வ விநாயக தெருவில் இருக்கும் பிச்சையா தேவர் அவர்கள் குமாரர் விவசாயம் கணபதி தேவர் 1, ஷையார் தாயார் சொர்ணம்மாள் 2 ஆகியோர்கள் எழுதி கொடுத்த ஒத்தி ஆவணம் ஆகும். அதில் என்ன சொத்து எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 17.02.1966ம் தேதிய ஆவண எண்.834/1966ல் கண்ட அதே சொத்துக்கள் தான் இந்த ஆவணத்திலும் கண்டுள்ளது. அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட போது பெறப்பட்ட கைரேகை பதிவேடு கொண்டு வந்துள்ளேன். அதன் உண்மை நகல் சா.சா.ஆ.4.

அசலையும் கொண்டு வந்துள்ளேன்.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

சா.சா.ஆ.3 மற்றும் 4ஐ பற்றியோ அதன் பதிவுகளை பற்றியோ எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த நேரத்தில் நான் பணியில் இல்லை என்றால் சரிதான். அந்த நேரத்தில் பணியில் இருந்த சார்பதிவாளரை கேட்டால் தான் அதன் பதிவுகள் பற்றி தெரியும் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கையொப்பம் இட்ட நபர்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக உள்ளார்களா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சா.சா.ஆ.3 மற்றும் 4ல் பெயர் மட்டுமே எழுதப்பட்டுள்ளது என்றும் கையெழுத்துக்கள் இல்லை என்றால் கையெழுத்தும் உள்ளது. கையெழுத்து போட தெரியாதவர்களுக்கு சார்பதிவாளர் தன் கைப்பட கீழே கீறல் என்று எழுதி அந்த நபரின் பெயரை எழுதுவார். சா.சா.ஆ.3 மற்றும் 4ல் அவ்வாறு கீறல் என்று எழுதப்படவில்லை என்றும் பெயர் மட்டும் தான் உள்ளது என்றால் பெயர் மட்டும் உள்ளது. சார்பதிவாளரின் கீறல் என்ற பதிவு இல்லை. ஆனால் ஆங்கிலத்தில் ஏதோ எழுதப்பட்டுள்ளது தெரிகிறது. அங்கு சார்பதிவாளரின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் வழக்கில் கண்ட கணபதி தேவர் தான் அந்த கையெழுத்தையும், கைரேகையையும் வைத்தாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மற்றொருவரின் கையொப்பமும் மற்றும் கைரேகை அவருடைய தாயாருடையது தானா என்று எனக்கு தெரியாது என்றால்

அவருடைய கையொப்பம் இல்லை. கைரேகை உள்ளது. அது அவருடைய கைரேகை தானா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. இஸ்மத் யுனூான் | பி.வா.சா.1 |
| Father's Name | : | செய்யது அகமத் | |
| Village | : | மேலப்பாளையம் | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | வியாபாரம் | |
| Caste | : | .. | |
| Religion | : | .. | |
| Age | : | 50 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.11.2018

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி :

நான் 02.06.1958ம் தேதிய கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.8. 10.01.1984ம் தேதிய கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.9. 27.06.1977ம் தேதிய கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.10. 17.06.1980ம் தேதிய பணப்பற்று ரசீதின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.11.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)